**செய்தி வெளியீடு எண்: 286** **நாள்: 14/05/2012**

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

## வீட்டுவசதி வாரியம் திட்டங்கள் மற்றும் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டங்கள் முக்கிய அறிவிப்பு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் வாரியத் திட்டங்கள் மற்றும் தன்னிறைவு வீட்டு மனை திட்டங்களில் குடியிருப்பு மனை/வீடு/அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் மாதத்தவணை செலுத்தி அதன் பிறகு 3 மாதங்களுக்கு மேல் மாதத் தவணை செலுத்தாமல் நிலுவை இருந்த காரணத்தால் ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டு உள்ள வீடு/அடுக்குமாடி குடியிருப்பு/மனைகள் ஆகியவற்றிற்கு இரத்து நீக்கம் செய்து மனை/வீடு/அடுக்குமாடி குடியிருப்புகளை திரும்ப பெற ஒதுக்கீடுதாரர்களுக்கு கடைசியாக ஒரு சந்தர்ப்பம் வழங்க வாரிய இரத்து நீக்கக்குழு முடிவு செய்துள்ளது. ஏனவே வீட்டு வசதி வாரியத்தில் ஒதுக்கீடு பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் (மனை/வீடு/அடுக்குமாடி குடியிருப்புகள்) மாதத்தவணைகள் தொடர்ந்து செலுத்தாததால் இரத்து செய்யப்பட்டதை ரத்து நீக்கம் செய்து பெற்றுக் கொள்ள விருப்பம் உள்ளவர்கள் ஒதுக்கீடு பெற்ற சம்பந்நப்பட்ட கோட்ட/பிரிவு செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் சென்னை வீட்டுவசதி வாரியத் தலைமையிடத்தில் இரத்து நீக்கம் கோரி 2012 ஜுன் 20க்குள் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இரத்து நீக்கம் கோரி விண்ணப்பிக்காத ஒதுக்கீடுதாரர்களின் ஒதுக்கீடு வாரியத்தின் மூலம் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு ரத்து செய்யப்பட்ட ஆணையை உறுதிபடுத்தவும் அல்லது ரத்து நீக்கம் செய்யவும் இந்த குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இரத்து நீக்கம் குறித்து வாரியம் உரிய விரிவான விதிமுறைகளின்படி முடிவு செய்யும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**மேலாண்மை இயக்குநர்,**
**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**